தினசரி சந்தை நிலவரம் ஏற்படுத்திய மாற்றம் மற்றும் எனது அனுபவம்

பி. சின்னதுறை(விவசாயி), த/பெ.பரமசிவம்,
முத்துகோணார்காடு,
தொடாவூர் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம்,
சேலம் மாவட்டம்.
அலைபேசி: 9942335356



---

என் பெயர் சின்னசாமி. நான் சேலம் மாவட்டத்திலுள்ள தொடாவூர் கிராமத்தை சேர்ந்தவர். நான் ஒரு விவசாயி கடந்த 10 வருடங்களாக காய்கறிகளை பயிரிட்டு வருகிறேன். நான் தலைவாசல் காய்கறி சந்தையில் காய்கறிகளை விற்று வருகிறேன். கடந்த காலங்களில் வியாபாரிகள் காய்கறிகளுக்கு விலையை நிர்ணயம் செய்வார்கள். மேலும் விவசாயிகளுக்கு சந்தை நிலவரம் பற்றி தெரியாது. இதனால் நாங்கள் பெரும் பாலான சமயங்களில் லாபம் பெறாமலும் வியாபாரிகள் அதிக வருமானம் பெறுவதாகவும் அமைந்திருந்தது.

தற்பொழுது தினசரி சந்தை நிலவரங்கள் (DMI) காய்கறிகளுக்காக சந்தை விலைகளை www.indg.in மூலமாகவும் குறுந்தகவல்களாகவும் வழங்கப்படுவதை அறிந்தேன். இது எனக்கு மகிழ்ச்சியாகவும் என்னால் என்னுடைய காய்கறிகளை சரியான விலைக்கு இப்பொழுது விற்பனை செய்ய முடிகிறது. Indg இணைய தளத்தை பார்த்த பிறகு என்னால் விலைகளை தெரிந்து கொண்டு சரியான விலைக்கு விற்க முடிகிறது. இதன் மூலமாக கடந்த சில நாள்கள் முன் என்னுடைய பச்சை நீள கத்தரிக்காய் லாபகரமான விலையில் விற்க முடிகிறது. இது என்னைப் போன்ற விவசாயிகளுக்கு மிகவும் உதவியாக உள்ளது. மேலும் இதன் இன்னொரு முக்கிய அம்சம் தமிழ்மொழியிலும் இந்த தகவல்களை பெறமுடிகிறது.

வியாபாரிகள் விலைகளில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தி காய்கறிகளில் நல்ல லாபங்களை பெற்றுவருவர். ஆனால் இப்பொழுது சந்தை தகவல்கள் அனைவரும் பெற முடிவதால் மொத்த மற்றும் சில்லரை விலை நிலவரங்களை அறிவதால் எங்கள் பொருட்களுக்கான விலையை பேரம்பேசி பெற முடிகிறது.

நான் எனது பொருட்களை தலைவாசல் மட்டும் அல்லாது வேறு சந்தைகளிலும் விற்பனை செய்ய முடிகிறது.

நான் கே.வி.கேயில் உறுப்பினராகவும் உள்ளேன். நான் மற்றவர்களுக்கும் (DMI) பற்றி கூறினேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும், வாங்குபவர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் உபயோகமான குறிப்புகளை வழங்குகிறது. நான் கருத்தரங்குகளில் கலந்து கொண்டபொழுது எனக்கு நிறைய ஆலோசனைகளை வழங்கினார்கள். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தினசரி சந்தை நிலவரம் (DMI) வழங்கியது. எங்களின் சமூகத்திற்கு கிடைத்த ஒரு பெரும் வளர்ச்சியாகும். தினசரி சந்தை நிலவரத்தை (DMI) வழங்கியதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு இதயம்கணிந்த நன்றியை தெளிவித்துக் கொள்கிறேன்.